# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


| மலர்: 21 | ரௌத்ர வருஷம் - சித்திரை, வைகாசி<br>ஏப்ரல், மே - 1980 | இதழ் : 3, 4 |
|---|---|---|


## லக்ஷ்யமும் கடமையும்

மனிதன், ஜீவகோடிகளான அனேக ப்ராணி வர்க்கங்களுக்குள் தன்னையே உயர்ந்தவனாக காண்கிறான். மனிதனை ஸ்ருஷ்டிப்பதில் எச்வரனும் முக்கியத்வம் வைத்திருக்கிறான் என்று ஏற்படுகிறது. ஆனால் இந்த ஜீவச்ரேஷ்டனாகிய மனிதன், தன்னுடைய லக்ஷ்யத்தை அறிந்து அதற்கான கடமையை எப்பொழுது செய்யத் தொடங்குகிறானோ, அப்பொழுதே உண்மையில் ச்ரேஷ்டத்வம் ஸித்திக்கிறது. இன்றைய உலகப் போக்கையும் ஸ்திதியையும் நோக்குங்கால், அவ்விதம் லக்ஷ்யமறிந்து அதற்கான ஸாதனங்களைச் செய்து கடமையைக் காப்பற்ற முன் வருபவர்கள் வெகு சிலரே; இல்லை எனவே சொல்லலாம். ஜனங்களில் பெரும்பலோர், மனிதனின் லக்ஷ்யமும் கடமையும் என்ன என்பதையே அறிந்தாரில்லை; அப்படி அறிய விரும்புவதுமில்லை.

புத்திமானான புருஷன் செய்யவேண்டியது என்ன? சாஸ்திரங்களைக் கற்றறிய முடியாத அசக்தர் விஷயத்தில் சாஸ்திரங்கள் தெரிந்த முமுக்ஷுக்களிடமிருந்தோ, தர்ம அதர்ம ஞானத்தையடைந்து தர்மசரணையிலிருப்போர்களிடமோ கேட்டறிதல் வேண்டும். பக்ஷபாதமற்ற அந்தராத்மாவைக்கொண்டு பகுத்தறிய வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. தீவிர விசாரத்தால் அந்தராத்மாவின் அபிப்பிராயமோ, அல்லது புத்தியின் நிர்ணயமோ, சத்யம், அஹிம்சை முதலிய ஸாமான்ய தர்மங்களிலோ ஈடுபடச்செய்யும். புத்தி நிர்ணயம் கிட்டின பிறகும் அந்தப்ர்காரம் செய்யாவிடில் அவர்கள் தங்கள் அழிவைச் தாங்களே தேடிக்கொள்கிறார்கள். ஆகவே நல்ல விஷயத்தையறிந்து அதை அனுஷ்டிக்காமல் போனாலும், கெட்டதை அறிந்து அதை விடாமல் போனாலும், அவன் அதோகதியைத் தான் அடைகிறான்.

ராகம் என்றால் விஷயத்தில் ஆசை; அந்த ஆசை கிட்டாதளவில் த்வேஷமாக ப்ரதிபலிக்கிறது. நமக்கு அப்படிப்பட்ட ராகத்வேஷங்கள், சோக மோஹங்கள் ஏற்படுகின்றன. காரணம் யாது? ஸாதாரணமாக ப்ராரப்தத்தினால் ஏற்படுகிறது என்று ஜனங்கள் எண்ணுவார்கள். ஆனால் அப்படியல்ல. இவை அக்ஞானத்தால் உண்டாகின்றன. ராகத்வேஷமே சோக

பயத்தின் காரணம்; க்லேசத்தைக் கொடுக்கக்கூடியது. அவித்யையால் ஏற்படுவது. அவித்யையின் நாசத்தாலேயே இவைகளெல்லாம் நாசமடைகின்றன. அவித்யை என்பது அறியாத்தன்மை அல்லது அக்ஞானம் எனப்படும். தனப்ராப்தியோ, நஷ்டமோ, வியாதியோ, சுகமோ, பிறப்பு-இறப்போ இவைகளுக்கெல்லாம் ப்ராப்தம் காரணம். ஆனால் சிந்தை, பயம், சோகம், மோஹம் முதலியவற்றிற்கு அக்ஞானமே காரணம். மூலக்ஞானம் நிவிருத்தியானால் இவைகளுக்கு இருப்பிடமில்லை என்று சுருதியே சொல்கிறது.

तत्र को मोहः, कः शोकः ऐकत्वमनुपश्यतः ।
हर्षशोकौ जहाति ॥

அக்ஞானத்திற்கு நாசமுண்டாக்க மார்க்கமென்ன? ஸம்யக் ஞானத்தின் உதயத்தால் அக்ஞானம் நசிக்கும். அந்த ஞானத்தை நாம் ஸாதனங்களைச் செய்து அடைய முயலவேண்டும். ஞானம் ஏற்பட்ட பிறகு அக்ஞானத்தின் சேஷ்டை இருக்கமுடியாது. இதற்கு முன்னோர்கள் அனுஷ்டித்து வந்த சாஸ்திர அபிப்ராயங்களில் நம்பிக்கை புத்தியுடன் இறங்கவேண்டும்.

பெரிய விருந்தில் நாம் சாப்பிட உட்காருகிறோம். ஏராள செலவில் நல்ல ருசியான பக்ஷணங்கள் பரிமாறுகிறார்கள். மிகுந்த ஆவலுடன் பூராவும் சாப்பிட யத்தனிக்கும் ஸமயத்தில் ஓர் நண்பன் " பக்ஷணத்தில் விஷம் கலந்திருக்கிறது; சாப்பிடக்கூடாது" என்று தெரிவிக்கிறான். என்ன ஆகிறது? இதைக் கேட்ட மாத்திரத்திலேயே வாயிலுள்ளதைத் துப்புகிறோம்; வயிற்றில் சென்றவைகளை வாந்தி செய்து வெளிப்படுத்த முயலுகிறோம். ஆகவே பக்ஷணத்தில் விஷத்தினுடைய அறிவு ஏற்பட்டவுடன் பதார்த்தம் எவ்வளவு ருசியாக இருந்த போதிலும் அதை நாம் சாப்பிட முன்வருவதில்லை. ஏன்? நண்பனின் வார்த்தையில் அவ்வளவு நம்பிக்கை. அவன் எது சொன்னானோ, அதை உண்மையாகவே ஸரியாகத்தான் சொல்லியிருப்பான் என்ற பூர்ண நம்பிக்கை.

ஸம்ஸாரபோகத்திலும் இதே நிலைமைதான். நாம் சாஸ்திரத்தில்-மஹா புருஷர்களுடைய வாக்கில் நம்பிக்கை வைத்தால் இந்த போகங்களில் மனம் வராது. ஸகல போகங்களும் இந்திரிய விஷயங்களின் சேர்க்கையால் ஏற்பட்டவை. ப்ரமையினால் ஸுக ரூபமாகக் காணப்பட்டாலும் ஸந்தேகமின்றித் துக்கத்தை உண்டுபண்ணக் கூடியவை. பிறப்பு-இறப்பைக் கொண்ட எல்லாவற்றிலும் இம்மாதிரிதான். புத்திமான்கள் ஈடுபடுவதில்லை என்று கீதாசார்யர் சொல்லியுள்ளார்.

இவ்வளவு அறிந்தும், மனிதன் இவைகளில் மனதைச் செலுத்தினால் அவன் பெரிய முட்டாள். விஷத்தினுடைய சேஷ்டையோ உடனே ஏற்படுகிறது. இதனாலோ ஒரு கெடுதலும் காணப்படவில்லை என்று சொல்லக்கூடும். விஷத்தில் பல வகை உண்டு. சில கொஞ்சம் கொஞ்சமாக வேலைசெய்ய ஆரம்பிக்கும். கடைசியில் அதனுடைய குணம் மிக பயங்கரமாக இருக்கும். இந்திரிய விஷய போகமும் மேற்சொன்ன மாதிரி ஆரம்பத்தில் ருசியுள்ளதாயும், காலக்ரமத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கடைசியில் பயங்கரமாகவுள்ள விஷத்திற்கொப்பானது. ராஜஸ விஷயஸுகத்தைப்பற்றி கீதையில் பகவான் சொல்லும்போது இதையே தெரிவிக்கிறார்:

विषयेन्द्रियसंयोगाद्यत्तदग्रे अमृतोपामं ।
परिणामे विषमिव तत्सुखं राजसं स्मृतं ॥

எந்த ஸுகம் இந்திரிய விஷய சேர்க்கைகளிலிருந்து ஏற்படுகிறதோ, அது போககாலத்தில் அமிர்தத்துக்கு ஸமானமாக விளங்கினாலும், முடிவில் விஷத்திற்கு ஸமானமே. அந்த ஸுகம் ஸாத்விகமல்ல, ராஜஸ ஸுகம்.

ஆகவே நாமெல்லோரும் அனேக விஷங்கள் சாப்பிடப்பட்டிருக்கிறோம். இதற்கு என்ன உபாயம்? பல உண்டு. சாப்பிட்ட விஷத்தை வெளிக்கிளப்பக்கூடும் அல்லது ஜீரணிக்க செய்யவும் கூடும். ஆனால் முதலில் வாஸ்தவமாக இது விஷம்தான் என்ற நம்பிக்கை வேண்டும். பகவானுடைய வசனங்களில் நம்பிக்கை வைத்து ப்ரத்யக்ஷத்தில் ஸுகம் போலக் காணப்பட்டாலும் அந்திமத்தில் துக்கத்தையே அளிக்கவல்ல விஷமென்று மதிக்கவேண்டும்.

கேட்கிறோம்; படிக்கிறோம்; ஆனாலும் நம்பிக்கை ஏற்படுகிறதில்லை. அப்யாசத்தாலும், வைராக்யத்தாலும் மனசைக் கட்டுப்படுத்தி, பூர்ண நம்பிக்கை ஏற்பட்ட பிறகு உபாயம் செய்யாமலிருப்பானா? நம்பிக்கையே இச்சாதனத்திற்கு ஆதார பூமி. மேலும் விஷத்திற்கொப்பான விஷய போகங்களைத் தாமதிக்காமல் தியாகம் செய்ய வேண்டும். ஏனெனில் விஷம் அதிகம் ஏறிவிடுமாகில் சிகிச்சை கஷ்டமாகிவிடும். எதுவரை சரீரத்தில் ப்ராணன் இருக்கிறதோ, அதற்குள் உபாயத்தைத் தேட வேண்டும். மரணம் எப்பொழுது வருகிறதென்று யார் அறிவார்? அதிலே பின்பு பார்த்துக்கொள்வோம் என்று அசட்டையாக இருத்தல் கூடாது.

பரமாத்ம ப்ராப்தியே நம்முடைய லக்ஷியமாகக் கொள்ளவேண்டும். ஸகல சாஸ்திரங்களுடைய தாத்பர்யம் அதுதான். ஒளிகள் கண்ட உண்மையும் அது தான். பரமாத்மாவே ஓர் உன்னத ஸுகம். சாச்வதமான சாந்தியினுடைய இருப்பிடமாகும். எல்லாவற்றிற்கும் மேலான அடையக்கூடிய உத்தமமான வஸ்து. அந்த உத்தம லக்ஷ்யமான பரமாத்ம பாவத்தை அடைய இடைவிடாமல் முயலுவதே மனுஷ்ய ஜீவனுடைய கடமையைக் காப்பாற்றுவதாகும். இந்தக் கடமையை ரக்ஷிப்பதில் தியாகம் செய்ய வேண்டும். தியாகத்திற்குத் தயாராக வேண்டியதுதான். பிறகு, "பரமாத்மாவை அடைய முடியும். மேலும் அவரை அடைவது மிகவும் ஸுலபம்" என்கிறது சாஸ்திரம். பரமாத்மாவை அடைவதற்கு மிகவும் பாத்ரம் யோக்யன் என்ற நம்பிக்கையும் வைக்க வேண்டும். எவ்வளவோ யோனிகளிலிருந்து எப்பொழுது மனுஷ்ய சரீரத்தைப் பகவான் அருளினாரோ அப்பொழுதே நாம் பாத்திரம் என்பது ஸித்தமாகிறது. பகவான் நமக்கு முக்தியினுடைய ப்ரயாண சீட்டு கொடுத்திருக்கிறார் என்றே சொல்லவேண்டும். அதாவது உத்தமமான லக்ஷ்யமாகிய முக்திக்கு அதிகாரியாகச் செய்திருக்கிறார்.

என்னை அடையாமல், லக்ஷ்யத்தில் இருந்து நழுவி, கொடுத்திருக்கிற உயர்ந்த ஜன்மாவை வ்யர்த்தமாக்கி, பாபாசாரத்தினால் க்ரூர கர்மாக்களைச் செய்கிறவர்களை மறுபடியும் கீழ்ப்பட்ட (தாழ்த்தப்பட்ட) பிறவிகளில் அடிக்கடி தள்ளுகிறேன் என்று கீதையில் சொல்லியுள்ளார். மேலும் முக்திக்கு அதிகாரத்தை அடைந்து வந்துள்ள ஜீவன் எப்பொழுது பகவானை மறந்து, பாபம் செய்கிறானோ, மறுபடியும் நரகத்தை அடைவதற்கு அருகதையாக ஆகிறானோ அப்பொழுது பகவான் துக்கத்தை வெளிப்படுத்திக்கொண்டே, "பார்! இவனை, நான் என்னை அடையக்கூடிய அதிகாரத்தைக் கொடுத்தனுப்பினேன்; ஆனால் இவன் இன்று தன்னை நரகத்திற்கு அனுப்பும்படியான ஏற்பாட்டைச் செய்துகொண்டுள்ளான். இதைவிட அதிகம் வருந்தக்கூடிய விஷயம் எது?" என்று பகவான் சொல்கிறார்.

ஒரு திருடன் மிகவும் போக்கிரி. அடிக்கடி ஜெயிலுக்குச் சென்றிருக்கிறான். அவனுக்கு ராஜ்யாதிகாரத்தில் ஏதாவது கொடுக்கமுடியுமா? அவனை மறுபடியும் மறுபடியும் ஜெயிலுக்குத்தான் அனுப்ப வேண்டும் என்று ஸர்க்கார் சொல்வது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது. ஒரு அரஸ குமாரனுக்கு, அரசன் இறந்த காரணத்தினால் ராஜ்யபாரத்தை ஸர்க்கார் பார்த்துக்கொண்டு மேஜரானவுடன் ஒப்புவிக்கிறது. பிதாவின் ராஜ்யமானதினால் பூர்ண பாத்யமிருந்தாலும், அரசகுமாரன் கெட்ட ஸங்கத்தினால், கெட்ட செயல்களில் ஈடுபட்டவனானால், ராஜ்யாதிகாரத்திலிருந்து தள்ளப்பட்டு, அத்துடனில்லாமல் தண்டனைக்கும்

உள்படுத்தி அனுபவிக்கச் செய்கிறது போல்தான் உத்தமமான மனுஷ்ய ஜன்மாவை அடைந்த நம்முடைய கதியும்.

கருணாநிதியான பகவானின் ஆக்ஞையை அலக்ஷ்யம் செய்து, அவரின் கருணைக்கு பாத்திரமாகாமல், வாழ்நாளைப் பாழாக்கி, நல்ல ஸந்தர்ப்பத்தை வீணாக இழந்துவிடுகிறோம். இதுவே நம்மிடமுள்ள தவறு. பகவானின் ஆக்ஞை என்ன? சீக்கிரம் விழித்துக்கொள்; காலத்தில் நம்பிக்கைவைத்து விஷயபோகத்தில் சற்றும் மாட்டிக்கொள்ளக்கூடாது. சரீரம் எப்பொழுதும் நித்யமாக இருப்பதல்ல, என்னை மறந்து விட்டு, ஸுகத்தின் லவலேசங்கூட அடையக் கூடுமென்று நினைப்பது தவறு. பரமானந்த ரூபமான முக்தி என்னும் கைவல்யஸுகத்தை அடையவேண்டியே விசேஷ கருணையுடன் உனக்கு இந்த மனுஷ்ய சரீரத்தையும், என்னை அடையும் உபாயத்தைப் போதிக்க சாஸ்திரங்களையும் தந்து உதவியிருக்கிறேன். உனது லக்ஷ்ய ரூபமான என்னை அடைந்து பயன் அடைவாய்" என்று ஆக்ஞாபித்துள்ளார். அதுவே நமது லக்ஷ்யமாக இருக்கவேண்டும். அவர் ஆக்ஞைப்படி நடப்பதே நமது கடமையாகும்.

( நன்றி: காமகோடி )

---

ராஜஸ்தானில் காஞ்சி ஜகத்குரு ஸ்ரீ ஆசார்யர்கள் விஜயயாத்திரை

புஷ்கரத்திலிருந்து ஜூன் மூன்றாம் தேதி கிளம்பி அஜ்மீர் ராம்வாய் குன்த் மந்திரில் இரண்டு தினங்களும் (4, 5 தேதிகள்), பிறகு கூக்ரா, கிஷ்ன்கர், பாட்டன், டுடு, கடேதோ, ஸுராணா, இவ்விடங்களுக்கு விஜயம் செய்து கொண்டு ஆங்காங்கே பூஜைகளை முடித்துக் கொண்டு ஜய்ப்புரை 9-ம் தேதி அடைந்தார்கள். அங்கு 11-ஆம் தேதி வரை தங்கி பிறகு ஸுராணா பர்ம் (Surana Farm), பக்ரு, கடோதா, டுடு, பாட்டன் என்ற ஊர்களுக்கு மறுமுறை விஜயமாகி 15-ஆம் தேதி புஷ்கர க்ஷேத்திரத்தை சேர்ந்தார்கள். அங்கு 15-ஆம் தேதி பிரம்மகுண்ட காட்டில் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர், ப்ரதிஷ்டை செய்தார்கள். அங்கிருந்து உதயப்புர், அம்பாஜி என்ற முக்கிய ஊர்களுக்கு விஜயமாகி வியாஸ பூஜையை அஹமதாபாத்தில் நடத்துகிறார்கள்.

---